மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2019), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 ஜூலை 20

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. என்ன காரணத்திற்காக எதிர்க்கிறது என்று சொன்னால், இன்றைக்கு ஏழாவது முறையாக இந்தத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் கொண்டு வந்திருக்கின்றீர்கள். 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாகவே உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்திருக்க வேண்டும். இதுவரை, கிட்டத்தட்ட ஆறு முறை தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிப்பு செய்யப்பட்டு, இப்போது ஏழாவது முறையாக தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

நான் நீதிமன்ற வழக்கிற்குள் செல்ல வேண்டாம் என்று நினைத்திருந்தேன். தேர்தல் நடத்தாததற்குக் காரணம் நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதுதான் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அதிலே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிக்கையை நீங்கள் வெளியிட்ட உடனேயே நாங்கள் நீதிமன்றத்திற்கு எதற்காகச் சென்றோம் என்று சொன்னால், தேர்தலை நிறுத்துவதற்காகவோ, தடை வாங்குவதற்காகவோ அல்ல. தேர்தல் நடைமுறையிலே, சில கோரிக்கைகளை நீதிமன்றத்தில் வைத்திருந்தோம். அதில் மத்திய அரசின் பொதுத் துறை ஊழியர்களை தேர்தல் அதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தோம். அதேபோன்று, வெளி மாநில அரசு ஊழியர்களைப் பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும்

@ 19–7–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

என்ற கோரிக்கையை வைத்திருந்தோம். Web camera பொருத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தோம். அதேபோன்று, இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தோம். வேட்பு மனுக்களை உடனடியாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பன போன்ற சில கோரிக்கைகளை மட்டும்தான் நாங்கள் நீதிமன்றத்தில் வைத்தோமே தவிர, உள்ளாட்சித் தேர்தலை நடத்தக் கூடாது என்று நீதிமன்றத்தில் தடை உத்தரவு கேட்கவில்லை. ஆனால், அன்றைக்கு நீதியரசராக இருந்த திரு. கிருபாகரன் அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுடைய கோரிக்கை மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார். அவரே suo motu ஆக, இந்த தேர்தல் அறிவிக்கையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று அவர் கொடுத்த தீர்ப்பில் தெரிவித்தார். "அனைத்துக் கட்சிகளுக்கும் உரிய கால அவகாசம் வழங்கப்படாமல் தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. அதைப்போல எல்லோருக்கும் சம வாய்ப்பைக் கொடுத்து வேறு ஒரு தேதியில் தேர்தல் நடத்த வேண்டும். அனைத்துக் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும்" என்று சொல்லி அன்றைக்குத் தேர்தலை இரத்து செய்துவிட்டு, டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்குள்ளாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற தீர்ப்பை அவர் வழங்கினார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்குப் பிறகு மூன்று ஆண்டுக்காலமாக பல்வேறு தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள்கூட வந்திருக்கின்றன. அதற்குள் நான் செல்லவில்லை. அதற்குக் கால அவகாசமும் இல்லை. எனவே இந்தத் தேர்தலை நடத்தாத காரணத்தால் இந்த நாட்டு மக்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுக்காலமாக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இல்லை. பஞ்சாயத்து யூனியன், மாவட்ட ஊராட்சிகள் போன்றவற்றில் கிட்டத்தட்ட 1,19,383 உள்ளாட்சி மன்றப் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்ற காரணத்தால் பொதுமக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பிற்பகல் 3–20

எங்களுடைய தலைவருடைய கட்டளையை ஏற்று நாங்களெல்லாம் ஊராட்சி அளவில் கூட்டத்தைக் கூட்டினோம்.

நான்கூட கன்னியாகுமரி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் என்று கிட்டத்தட்ட 80, 85 ஊராட்சிகளில் நடைபெற்ற கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டேன். (குறுக்கீடு) உரையை முடித்து விடுகிறேன். ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்குச் சென்றபோதுதான் உண்மையான நிலவரத்தைப் பார்த்தேன். எந்த அடிப்படைப் பணிகளுமே அங்கே நடைபெறவில்லை. குடிதண்ணீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடியதைப் பார்த்தோம். அதைப்போல தெருவிளக்குகள் ** இருந்த நிலையை அங்கு பார்த்தோம். (குறுக்கீடு) நான் உரையை முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் பேசுவீர்கள். அதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடுகள்) அவர் குற்றச்சாட்டாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அதற்கு நான் ஒரு மணி நேரம் பதில் சொல்ல வேண்டியதிருக்கும். அவ்வாறு பதில் சொன்னால், அவையை நடத்த முடியுமா? (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் முடியாது. அவர் பேசுவதையெல்லாம் என்னால் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. அதற்கு ஒரு மணி நேரம் நான் பதில் சொல்ல வேண்டியதிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இருங்கள். (குறுக்கீடு) இல்லை.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: Bill சம்பந்தமானவற்றில் என்ன ஆட்சேபணையோ அதைத்தான் பேச வேண்டும். Subject–ல்தான் பேச வேண்டும். குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இந்த Bill–ல் பேச வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் குற்றச்சாட்டு சொன்னால், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் அல்லவா! (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. குற்றச்சாட்டு சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படிப் பதில் சொல்லாமல் இருப்பார்? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் வாய்ப்புக் கேட்கிறார். சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி ஆரம்பத்தில் பேசியபோதே நான் அதற்குப் பதில் தெரிவித்துவிட்டேன். யார் முதலில் நீதிமன்றத்திற்குச் சென்றது? நீதிமன்றத்தில் பழங்குடியினர் குறித்து அவர்கள் தெரிவித்த objection சரியானது என்று நீதிமன்றம் தெரிவித்துவிட்டது. அதுமட்டுமல்லாமல், அந்தச் சூழ்நிலையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது, அறிவிப்புகளெல்லாம் செய்துவிட்ட பிறகு, 32 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி தொடர்ச்சியாக மீண்டும் வருகிறது. நீங்கள் எதற்காக Court–க்குச் சென்றீர்கள் என்பது மக்களுக்குத் தெரியாதா! அந்த subject–க்குள் நான் போகவில்லை. இன்றைக்கு 1,19,000 வார்டுகள் வரையறை செய்யப்பட்டு விட்டன. 22 ஆண்டுகளாக யாருமே அந்தப் பணிகளை மேற்கொள்ளவில்லை. நீங்களும் செய்யவில்லை, நாங்களும் செய்யவில்லை. இன்றைக்கு முழுமையாக வார்டு வரையறை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை யாருமே எடுத்துச் செய்யவில்லை. தேர்தல் ஆணையம் உத்தரவிட்டதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களின் அரசுதான் அதைச் செய்து முடித்துக் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, நீங்கள் சட்டமுன்வடிவின்மீது பேசும்போது குற்றச்சாட்டாகச் சொல்கிறீர்கள். தண்ணீர்ப் பிரச்சினை குறித்து முழுமையாகப் பேசி முடித்தாகிவிட்டது. அது இயற்கையான சூழ்நிலை. தெருவிளக்கு அமைப்பதைப் பொறுத்தளவில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசும் சரி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களின் ஆட்சியிலும் சரி, அனைத்துக் கிராமங்களிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன. நீங்கள் உங்கள் காலத்தில் எவ்வளவு அமைத்தீர்கள்? 8 வருடங்களுக்குக்கூட வேண்டாம், 5 ஆண்டுக் காலத்திற்கு மட்டும் எடுத்துக்கொள்ளலாம்; நாங்கள் எவ்வளவு அமைத்திருக்கிறோம் என்ற அனைத்துப் புள்ளிவிவரங்களும் என்னிடம் இருக்கின்றன.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 ஜூலை 20

நான் அதற்குள் எல்லாம் போகவில்லை. சட்டமுன்வடிவின்மீது objection செய்து பேசினால் பரவாயில்லை. குற்றச்சாட்டு சொன்னால் நானும் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமல்லவா!

அதேபோல், ஊராட்சிகளைப் பற்றிப் பேசினீர்கள். ஊராட்சிகளில் தனி அலுவலர் நியமனம் செய்யப்பட்டதால் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி நான் தற்போது சொல்கிறேன். THAI திட்டம்–2, தமிழக ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், நபார்டு திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம், தூய்மை பாரத இயக்கம், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் உள்ளிட்ட அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குடிநீர்ப் பிரச்சினைகள் தற்போது சமாளிக்கப்பட்டு, வறட்சி நிவாரணப் பணிகள் மட்டுமல்லாது, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் உத்தரவிட்ட தன்னிறைவு திட்டம், அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள், அம்மா பூங்காக்கள் உள்ளிட்ட திட்டங்கள் 35,736 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் 39,63,000 பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 16,524 ஊராட்சிகளில், 350 யூனியன்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு, அனைத்து இயற்கையான சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சமாளித்திருக்கிறோம். அம்மாவினுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, கஜா புயலாக இருந்தாலும் சரி, குடிநீர்ப் பற்றாக்குறையாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் சமாளித்திருக்கிறது. 2016–ல் கடுமையான வறட்சி ஏற்பட்டது. 142 வருடங்களில் இல்லாத வறட்சி ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, அனைத்து இடங்களுக்கும் monitoring officers நியமனம் செய்யப்பட்டார்கள். அனைத்து மண்டலங்களுக்கும் monitoring officer சென்று, ஆய்வு செய்கிறார்கள். அனைத்து இடங்களையும் survey செய்கிறார்கள். என்னென்ன பிரச்சினையென்று நேரடியாகச் சென்று பார்க்கிறார்கள். சென்னையில் 15 மண்டலங்கள் உள்ளன. 15 மண்டலங்களுக்கும் 15 I.A.S. Officers நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அனைத்துப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைப்

பொறுத்தளவிற்கு உச்ச நீதிமன்றமே ஏற்றுக்கொண்டுவிட்டது. உச்ச நீதிமன்றமே திருப்தி என்று தெரிவித்து, நம்முடைய schedule–ஐ ஏற்றுக்கொண்டது. அந்த schedule–ஐ நாம் கொடுத்துவிட்டோம், திருப்தியாக போய்க்கொண்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய உண்மையான பாதிப்புகளை, யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் நான் சொன்னேன். உங்களுக்குத் தெரியும், தெரியாமல் இல்லை. இருந்தாலும் தனி அதிகாரியையோ அல்லது ஒரு B.D.O.–வையோ நியமித்திருக்கிறீர்கள். அவருடைய தலைமையின்கீழ் கிட்டத்தட்ட 40, 50, 60 என்ற எண்ணிக்கையில் ஊராட்சிகள் வருகின்றன. ஒரு ஊராட்சியில் ஒரு ஊராட்சி மன்றத் தலைவர் பார்க்கக்கூடிய பணியை, 40, 50 ஊராட்சி மன்றத் தலைவர்கள் பார்க்கக்கூடிய பணியைத்தான் தனி அலுவலர் பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால்தான் மக்களுக்குப் பாதிப்பு. சில பணிகள் காலதாமதமாகின்றன. ஒரு வரைபடத்திற்கு அனுமதி வாங்க வேண்டியதாக இருந்தாலும், சிறு தொழில் தொடங்குவதற்கு அனுமதி வாங்க வேண்டியதாக இருந்தாலும், பல்வேறு வகைகளில் பணிகளில் காலதாமதம் ஏற்படுவதால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. மத்திய அரசின் மூலமாக வர வேண்டிய 3,780 கோடி ரூபாய் நிதி உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தால். . . (குறுக்கீடு)

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று முன்தினம்தானே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் தெரிவித்தார். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆஸ்டின்: ஆமாம். ஆனால், நான் என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய வேண்டுமல்லவா! (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் நீங்கள் உங்களுடைய கருத்தைப் பதிவு செய்யலாம். (குறுக்கீடு) மீண்டும்

நீங்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் வாய்ப்பு வழங்க வேண்டும். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆஸ்டின்: *நமக்குக் கிடைக்க வேண்டிய நிதிதான். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தொடர்ந்து குற்றச்சாட்டுகளாக பேசிக் கொண்டேயிருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டியது இருக்கும்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *இந்த நிதி நமக்கு வரவில்லை. இதனால் வளர்ச்சிப் பணிகள் தடைபடுகின்றன. எனவே, இந்தத் தேர்தலை உடனடியாக நடத்தினால்தான் மக்களுக்கான பணிகளை நாம் செய்ய முடியும். எத்தனையோ வாய்தா வாங்கி விட்டீர்கள். இப்போது தேதியைக் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, மக்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு, இன்னும் நீதிமன்றத்தில் அவகாசம் வாங்காமல், வாய்தா வாங்காமல் இந்தத் தேர்தலை உடனடியாக அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலங்களின்போது சட்டமுன்வடிவின்மீது நாங்களும் பேசியிருக்கிறோம். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் கடைசி நாள் என்பதால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்பு அதிகமாகக் கொடுக்கிறார். (குறுக்கீடு) நாங்களும் சட்டமுன்வடிவில் பேசியிருக்கிறோம். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பேரவைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர் எங்களையெல்லாம் எப்படி அமர வைத்தார் என்பது எங்களுக்கும் தெரியும். அவர்களுக்கு அதிகமாகத்தான் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும், நான் பதில் சொன்ன விஷயங்களைப் பற்றியே மீண்டும் மீண்டும்*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டேயிருந்தார் என்றால் அதற்கு நான் மீண்டும் பதில் சொன்னால் நேரம்தான் அதிகமாகும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து நாம் பெற வேண்டிய நிதியைப் பற்றிப் பேசினார். மத்திய அரசிடமிருந்து ஏற்கெனவே 8,000 கோடி ரூபாய்க்கு மேல் நிதி வாங்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருந்தாலும்கூட, மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய நிதியினைப் பெற்றுதான் வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 2015–லிருந்து நிதி வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். அதுகுறித்தெல்லாம் நான் விவரமாக ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். மீதியிருக்கிற நிதியைக்கூட பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிற சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்படவில்லை என்று இப்போது சொன்னால் எப்படி? தேர்தலை அவர்கள்தானே நிறுத்தினார்கள். தேர்தலை நிறுத்தியது அவர்கள்தானே! தேர்தல் நடத்தப்படவில்லையென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், தேர்தலை நிறுத்தியதே அவர்கள்தானே! அவர்களுடைய கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்கள் வழக்கு தொடர்ந்ததால்தானே தேர்தல் நின்றது! இதெல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரியாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2019), மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 8–7–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.